சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி பத்மா எனது மகள் என்றால் சரிதான். கிருஷ்ணன் என்பவர் எனது தாய்மாமா ஆவார். கிருஷ்ணன் என்பவரை நான் தான் கடைசிகாவலத்தில் பராமரித்து வந்தேன். அப்போது தான் அவரிடம் இருந்து அதிகார ஆவணம் எழுதி வாங்கப்பட்டது என்றால் சரிதான். என் மாமா இறந்தபிறகு பவர் ஆவணம் அற்றுபோய்விட்டது என்றும், பின்தேதியிட்ட முத்திரைதாள் வாங்கி வா.சா.ஆ 1 ஆவணத்தை நானும், எனது மகளும் சேர்ந்து ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல. நான் பொது அதிகார முகவர் என்ற முறையில் எழுதிகொடுக்கவில்லை என்றும், அதனால் அந்த ஆவணமானது சட்டபடி செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 ஆவணத்தில் 1 வது சாட்சியாக கையெழுத்துள்ள செல்லப்பா எனது கணவர் ஆவார். 2 வது சாட்சியாக கையெழுத்துள்ள ஜமாலுதீன் எனது கணவரின் நண்பர் ஆவார். வா.சா.ஆ 1 ஆவணம் தயார் செய்வதற்கு முத்திரைதாள் பணகுடியில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் இடைகாலில் வைத்து எழுதப்பட்டது. ராமகிருஷ்ணன் எழுத்துக்காரர் அச்சன்புதூரை சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆவண எழுத்தர்கள் பொதுவாக ஆவணம் எழுதும் போது பதிவேடு பயன்படுத்த வேண்டும் என்றும், இந்த வா.சா.ஆ 1 ஆவணம் அந்த பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்யப்பட்டது. மூ.தா.சா.ஆ 2 ரசீதானது என் மாமாவிடம் தான் இருக்க வேண்டும் என்றும், என்னிடம் அந்த ஆவணம் எவ்வாறு வந்தது என கூறப்படவில்லை என்றால் பணத்தை நாங்கள் தான் செலுத்தினோம். அதனால் ரசீது எங்களிடம் உள்ளது. மூ.தா.சா.ஆ 2 ஐ பற்றி வழக்குரையில்

சொல்லப்படவில்லை என்றும், இது சம்பந்தமாக வா.சா.1 யிடம் குறுக்குவிசாரணையில் கேள்வி கேட்கபட்டதால் மூ.தா.சா.ஆ 2 தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மூ.தா.சா.ஆ 2 ல் உள்ள கையெழுத்து என் மாமாவின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ரசீதுகள் வழக்கிற்கு சம்பந்தம் இல்லாதது என்றால் சரியல்ல. என் கட்சிபடி பார்த்தாலும் பகுதி ஒப்பந்த நிறைவேற்றம் கூறியுள்ள நிலையில் தாவா ஒப்பந்தம் பதிவு செய்யப்படாததால் அது செல்லதக்கது அல்ல என்றால் சரியல்ல. நானும், என் மகளும் சேர்ந்து கிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டதும், பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என பொய்யாக ஆவணம் தயார் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மூ.தா.சா.ஆ 2 ல் குறிப்பிட்டுள்ளவாறு தொகை கொடுக்கும் அளவிற்கு என் மகளுக்கு வசதி இல்லை என்றால் சரியல்ல. என் மருமகன் வெளிநாட்டில் வேலை செய்கிறார். எனது மருமகன் வெளிநாட்டில் இருந்து வங்கி கணக்கிற்கு செலுத்தி என் மகள் எடுத்து வந்தாரா என்றால் அது பற்றி தெரியாது. என் மகள் தான் பணம் கொண்டு வந்தார். பணம் பரிவர்த்தனை சம்பந்தமாக நான் ஆவணங்கள் இல்லாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.